
# தமிழ் மொழியும் இலக்கியமும்

தரம்-8

அலகு -5

## முயற்சி திருவினையாக்கும்

முடிந்தவரை செய்வதற்கு
பெயரல்ல முயற்சி,
எடுத்த காரியம் முடியும்
வரை செய்வதற்கு பெயரே
முயற்சி



*Mr.S.Rajkumar, (B.A)*
*BT/BW/Kayankudah Kannaki Vid.*
*Batticaloa.*

**ஸ்கொட்லாந்து தேசத்து மக்கள், "ஆங்கிலேயர் ஆட்சியில் இருந்து விடுபட்டு தங்களைத் தாங்களே ஆட்சி செய்ய வேண்டும்" என நினைத்தனர்**. இதனால் போர் மூண்டது. இராபட் புரூஸ் தலைமையில் சென்ற படை ஆறு முறை ஆங்கிலேயருக்கு எதிராக படையெடுத்து, ஆறு முறையும் தோல்வி கண்டது. படைகளும் உடைந்து சிதறியது இதனால் மனம் வருந்திய இராப் புரூஸிக்கு நெஞ்சில் நின்ற தைரியமும், ஊக்கமும் குறைந்து கொண்டே வந்தது. **"இந்நாட்டிற்கு விடுதலை கிடைக்குமா?"** எனும் ஐயப்பாடும் ஏற்பட்டது.

**ஆங்கிலேயர்களினால், இராபட் புரூஸின் உயிருக்கே ஆபத்து வரும் என்பதால்** உயிர் தப்பிப் பிழைப்பதற்காக **காடுகளிலும் மலைப் புறங்களிலும், ஏழை எளியவர்களின் குடிசைகளிலும்** மறைந்து திரிந்து வாழ்ந்தார்.

அவர் மறைந்திருந்த குடிசையின் கூரையிலே ஒரு சிலந்திப் பூச்சி கூடு கட்டுவதற்காக ஆறு தடவைகள் முயற்சித்தும் விட்டத்தில் இருந்து கீழே விழுந்தது. கூடு கட்டும் முயற்சி கைகூடவில்லை. ஆனால் அது முயற்சியை கைவிடவில்லை. ஏழாவது தடவை முயற்சித்து, கூடு கட்டி அதில் வெற்றி கண்டது.

இச் சிறிய **பூச்சி முயற்சி செய்ததன் பயனாக ஏழாவது தடவை அடைந்த வெற்றியை படிப்பினையாகக் கொண்டு**, மீண்டும் படைகளைத் திரட்டி, ஆங்கிலேயர்களுக்கு எதிராக போர் செய்து, வெற்றி பெற்று ஸ்கொட்லாந்து நாட்டிற்கு மன்னனானான்.

## 1. பாடப்பகுதியை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடை எழுதுக.

1. ஸ்கொட்லாந்து நாட்டவருக்கும் ஆங்கிலேயர்களுக்கும் இடையில் போர் மூளக் காரணம் யாது?
2. இராபட் புரூஸிக்கு ஏற்பட்ட ஐயப்பாடு யாது?
3. இராபட் புரூஸ் என்ன காரணத்தினால் மறைந்து திரிந்தான்?
4. இராபட் புரூஸ் மறைந்திருந்த இடங்கள் எவை?
5. இராபட் புரூஸ் சிலந்திப் பூச்சியிடம் பெற்றுக்கொண்ட படிப்பினை யாது?

**(5X4=20)**

## வேற்றுமை

வாக்கியத்தில் **பெயர்ச்சொல்லின்** இலக்கணத் தொழிற்பாடு வேறுபடுதல் வேற்றுமை ஆகும். இது **08 ஆகும்** என நன்னூலார் கூறுகின்றார்.

### 05 ஆம் வேற்றுமை (நீங்கல் வேற்றுமை)

வாக்கியத்தில் பெயர்ச் சொல்லானது நீங்கல் பொருளை உணர்த்தும் வகையில் செயற்படுதல் ஐந்தாம் வேற்றுமை ஆகும்.

**இதன் உருபு – இல், இன்** - உ+ம் மலை**யில்** வீழ் அருவி.

**சொல்லுருபு - இருந்து, நின்று, காட்டிலும், பார்க்கிலும், விட**

உ+ம் மலையில் **இருந்து** வீழும் அருவி.

**நீங்கல், எல்லை, ஒப்பு, ஏதுப்** பொருள்கள் ஐந்தாம் வேற்றுமையால் உணர்த்தப் படுகின்றன.

**நீங்கல்** - மலை**யில்** வீழ் அருவி .

**எல்லை** - இலங்யை**யின்** வடக்கு இந்தியா.

**ஒப்பு** - இராம**னில்** பரதன் சிறந்தவன்.

**ஏது** - பாட்**டில்** சிறந்தவன் பாரதி.

## 02 மிகப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக

1. சிலந்தி முழுப் பலத்துடனும் வாய் நூலில் ஊஞ்சல் ஆடிற்று. **பலம்** என்பதன் ஒத்த சொல் யாது?
   1 உரம் 2. தனம் 3. உறுதி 4. கனம்

2. இரண்டு தேசங்களுக்கும் இடையே போர் மூண்டது. இங்கு **போர்** எனும் சொல்லின் ஒத்த கருத்துச் சொல் அல்லாதது?
   1. யுத்தம் 2. சமரசம் 3. அமர் 4. சண்டை

3. வீரர்கள் அவரைப் பிடிக்க பெரும் முயற்சி செய்தார்கள். **வீரன்** என்பதன் எதிர்ச்சொல்
   1. பலசாலி 2. சாமத்தியன் 3. கோழை 4. சூரன்

4. பின்வருவனவற்றுள் எதிர்க்கருத்துச் சொல் அல்லாத சோடி
   1. அறம் - மறம் 2. உவந்து – விரும்பி 3. ஏகம் - அனேகம் 4. ஐயம் - தெளிவு

5. சிற்றரசர்கள் பேரரசர்களுக்கு செலுத்தும் **கப்பம்** எவ்வாறு அழைக்கப்படும்.
   1. மானியம் 2. திரை 3. சன்மானம் 4. திறை

6. ஐந்தாம் வேற்றுமைக்குரிய உருபுகள்

1. அது,ஆது 2. கு, ஐ 3. இல், இன் 4. ஒடு, ஓடு

7. பாட்டில் சிறந்தவன் பாரதி. இவ் வாக்கியம் என்ன பொருளில் வந்துள்ளது.

1. நீங்கற் பொருளில் 2. எல்லைப் பொருளில் 3. ஒப்புப் பொருளில் 4. ஏதுப் பொருளில்

8. மரத்தில் இருந்து விழுந்த கனி. இங்கு இடம்பெற்றுள்ள ஐந்தாம் வேற்றுமைக்குரிய சொல்லுருபு எது?

1. மரம் 2. விழுந்த 3. இருந்து 4. இல்

**இடை வெளிகளை நிரப்புவதற்கு பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக**

9. அந்தப் ………. மீது ஏறியிருந்து காவல் காத்தனர்

1. பறன் 2. பரண் 3. பரன் 4. பறண்

10 தேன், கள், குற்றம், வாசனை ஆகிய பொருள்களை ………. எனும் சொல் கொண்டு அழைக்கலாம்

1. நறை 2. மாசு 3. தேறல் 4. கடி

(10X2=20)

## 3. பின்வருவனவற்றை தொடர்பு படுத்துக.

| | |
|---|---|
| 1. சேனை | மக்கள் |
| 2. ஈடேற்றம் | வெட்கம் |
| 3. விரோதி | படை |
| 4. குடிகள் | எதிரி |
| 5. நாணம் | நிறைவேறுதல் |

(5X2=10)

## 4. பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து இடைவெளியில் எழுதுக.

1. …………. கடல் ஓடி திரவியம் தேடு ( திறை / திரை )

2. எல்லாக் காரியங்களிலும் நாம் ……………… செயற்பட வேண்டும் (பொருப்புடன் / பொறுப்புடன்)

3. நெருப்பில் இருந்து பறந்த …………… என் காலில் சுட்டது. ( பொரி / பொறி )

4. அந்தப் பையனை ……………. தீண்டியதால் மயக்கமுற்றான் ( அறவம் / அரவம் )

5. அதிகமான மாணவர்கள் ‘‘முயற்சி திருவினையாக்கும்’’ எனும் பாடத்தில் நல்ல ………………பெற்றனர் ( தேறல் / தேரல் )

(5X2=10)

## 05 பின்வருவனவற்றை சரியாயின் சரி (√ ) எனவும் பிழையாயின் பிழை (×) எனவும் குறியீடு இடுக

1. இராபட் புரூஸ் ஆங்கிலேயர் படைத் தலைவனாக இருந்தான். (     )
2. ஆறு தடவைகள் படையெடுத்து யுத்தம் செய்து தோல்வி கண்ட இராபட் புரூஸின் படையானது ஏழாவது தடவை யுத்தம் செய்தபோதே வெற்றி கண்டது. (     )
3. சிலந்தியானது கூடு கட்டும்போது 6 தடவைகள் முயற்சித்து தோல்வி கண்டபோதும் சோர்வடையாமல் கூட்டைக் கட்டி முடித்தமையே இராபட் புரூஸிக்கு படிப்பினையாகும். (     )
4. ஐந்தாம் வேற்றுமையை இடவேற்றுமை எனவும் அழைப்பர். (     )
5. “கவியில் சிறந்தவன் கம்பன்” என்பது ஐந்தாம் வேற்றுமை ஏதுப் பொருளாகும். (     )

(5X2=10)

**06 பின்வரும் வாக்கியங்களில் ஐந்தாம் வேற்றுமை உருபை அல்லது சொல்லுருபை ஏற்றுள்ள சொற்கள் உணர்த்தும் பொருள்களை எழுதுக.**

1. இராமனில் பரதன் சிறந்தவன் - ……………………………..
2. மரத்தில் இருந்து விழுந்த கனி - …………………………
3. பாட்டில் சிறந்தவன் பாரதி - ………………………………...
4. பாடசாலையின் வடக்குப் புறத்தில் மைதானம் உள்ளது ……………………
5. புற்றிலிருந்து பாம்பு வெளியேறி விட்டது ………………………………………

6. என்னைவிட தம்பி நன்றாகப் பாடுவான். …………………………………………………………

7. விளையாட்டில் சிறந்து விளங்குவது எமது பாடசாலையாகும். ………………………………

8. எனது வீட்டின் பின்னால் ஆறு ஓடுகின்து. ………………………………………………………

9. குகன் நாட்டிலிருந்து சென்றுவிட்டான். ………………………………………………………..

10. இராமனைப் பார்க்கிலும் வாலி பலசாலி …………………………………………………………

(10X3=30)

# விடைகள்

## 01

1. ஸ்கொட்லாந்து தேசத்து மக்கள், "ஆங்கிலேயர் ஆட்சியில் இருந்து விடுபட்டு தங்களைத் தாங்களே ஆட்சி செய்ய வேண்டும்" என நினைத்தனர்.
2. "இந்நாட்டிற்கு விடுதலை கிடைக்குமா?"
3. ஆங்கிலேயர்களினால், இராப் புரூஸின் உயிருக்கே ஆபத்து வரும் என்பதால்
4. காடுகளிலும் மலைப் புறங்களிலும், ஏழை எளியவர்களின் குடிசைகளிலும்
5. பூச்சி முயற்சி செய்ததன் பயனாக ஏழாவது தடைவ அடைந்த வெற்றியை படிப்பினையாகக் கொண்டு

## 02

1. - 1
2. - 2
3. - 3
4. - 2
5. - 4
6. - 3
7. - 4
8. - 3
9. - 2
10. - 1

-

## 03

| | | |
|---|---|---|
| 1 | - | 3 |
| 2 | - | 5 |
| 3 | - | 4 |
| 4 | - | 1 |
| 5 | - | 2 |

## 04

1. திரை
2. பொறுப்புடன்
3. பொரி
4. அரவம்
5. தேறல்

## 05

1. பிழை
2. சரி
3. சரி
4. பிழை
5. சரி

## 06

1. ஒப்பு
2. நீங்கல்
3. ஏது
4. ஏல்லை
5. நீங்கல்
6. ஒப்பு
7. ஏது
8. எல்லை
9. நீங்கல்
10. ஒப்பு

# நன்றி



# வணக்கம்